RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijmrd2313

Asian Research Association

INDIAN JOURNAL OF
MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

# Analytical properties in Purananuru

## புறநானூற்றில் செவ்வியல் பண்புகள்

**Y. Durgadevi** [a, *]

[a] Department of Tamil, Vels Institute of Science, Technology & Advanced Studies (VISTAS), Chennai-600117, Tamil Nadu, India

*Corresponding author Email: yvdurga3@gmail.com

DOI: https://doi.org/10.54392/ijmrd2313

Received: 18-01-2023; Revised: 23-02-2023; Accepted: 01-03-2023; Published: 14-03-2023

**Abstract:** Purananaru is a Tamil text that consists of four hundred hymns in praise of the object. All events that take place overtly are objective. The text describes well about Politics, Commerce, Histories, Philosophies, War Events and so on. The text beautifully depicts Pari's love for Kapil and the friendship between Pisiranthaiyar and Kopperuncholan. Purananuru is the best text that describes the song of Kapila in the loss of Pari and the bravery in the song of Auvai in the loss of Athiyaman. This article summarizes and examines the characteristics of the text Purananuru.

**Keywords:** Puranaanuru, Athiyaman, Pisiranthaiyar, Kopperuncholan

**Language:** **Tamil**

### முன்னுரை

தமிழர்களின் சிறந்த சமுதாய வாழ்வு, அரசியல் நிலை, அன்றைய பழக்கவழக்கங்கள், நாகரிகம், கல்வி, பொருளாதாரம், கலை, விருந்தோம்பற் சிறப்பு, உயர்ந்த ஒழுக்கம், உறுதியான கொள்கை, தந்நலமற்றதியாகம், தலைநிமிர்ந்த தன்மான வீரவாழ்வு இவைகளை எல்லாம் இந்நூலால் அறிய முடிகிறது. “பண்டைத்தமிழர் வரலாற்று நூல் என்று புறநானூற்றைக் கூறுவது பொருந்தும்" என எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும் என்னும் நூலில் சாமி. சிதம்பரனார் கூறியுள்ளார் (Sidhamparanaar, 1986).

### உலகுடன் ஒன்றி வாழ்தல் பண்பாடு

பழந்தமிழர் பண்பாடு மிக உயர்ந்தது. உலகமெல்லாம் பாராட்டிப் பின்பற்றக் கூடியது. தமிழ் மக்கள் உலகத்தை ஒன்றென்று கருதினர். உலக மக்களை ஒரே குலத்தவராக எண்ணினர். எல்லா ஊர்களும் எம்முடைய சொந்த ஊர்கள். எல்லா மக்களும் எம்முடைய உறவினர்கள். நன்மையும், தீமையும் பிறரால் வருவன அல்ல. யாம் இன்புறுவதும் துன்புறுவதுங் கூட அவை போலத்தான் இறத்தல் இயற்கை. ஆகையால் இவ்வுலக வாழ்வு இனிமையானது என்று மகிழவுமாட்டோம். கடுஞ்சினத்தால் இவ்வாழ்வு துன்பமுடையது என்று வெறுக்கவுமாட்டோம். இதனை,

"யாதும் ஊரே; யாவரும் கேளிர்;

தீதும் நன்றும் பிறர்தர வாரா;

சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்

நோதலும் தணிதலும் அவற்றோரன்ன;

இனிது என மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்,

இன்னாது என்றலும் இலமே;" (Swaminatha Iyer, 1894)

என்ற பாடலில் கணியன் பூங்குன்றனார் உலக சமாதானத்தை நிலை நாட்டும் உயர்ந்த குறிக்கோளுடைய ஒப்பற்ற நிலையை விளக்கி உள்ளார். ஆகவே இப்பாடல் செவ்வியல் உலகப்பொதுமைப் விளங்குகின்றது.

## போரில் அறம்

தகுந்த காரணமின்றி பண்டைத் தமிழ் மன்னர்கள் போரிலே தலையிடமாட்டார்கள். தங்கள் குடிகளைத் துன்புறுத்தும் கொடுங்கோல் வேந்தர்களின் மேல் போர் தொடுப்பார்கள். மறப்பண்பு, மண்ணாசை, பெண்ணாசை, வீரச்செயல்களில் நாட்டம், உடல்தினவு, தற்காப்பு எண்ணம், வெகுளி, பொறாமை முதலிய காரணங்களால் போர் என்பது அக்கால மக்களிடையே தவிர்க்க முடியாததாய் அமைந்தது. இப்படிப்பட்ட வகையில் போர் நடந்தாலும் அப்போரிலும் அறத்தைக் கையாண்டுள்ளனர். இதனை,

"ஆவும், ஆன்இயற் பார்ப்பன மாக்களும்,

பெண்டிரும், பிணியுடையீரும், பேணித்

தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்

பொன் போல் புதல்வர்ப் பெறாஅதீரும்,

எம் அம்பு கடிவிடுதும், நும் அரண் சேர்மின் என

அறத்து ஆறு நுவலும் பூட்கை, மறத்தின்,

கொல் களிற்று மீமிசைக் கொடி விசும்பு நிழற்றும்

எம் கோ, வாழிய, குடுமி" (Swaminatha Iyer, 1894)

என்னும் பாடல் அடிகளின் மூலம் பசுக்களும், பார்ப்பனரும், புதல்வர்களைப் பெறாதோரும், பெண்களும், நோயுடையோரும் பாதுகாப்புடைய இடங்களைத் தேடிச் செல்லுங்கள் என அரசன் முன்னே எச்சரிக்கும் அறச்செயலைக் காண முடிகின்றது. ஆகவே இப்பாடல் உயர்சிந்தனைக் கருத்தையும், பொதுமைப் பண்பையும் உணர்த்துகின்றது.

## அரசாட்சியில் அறம்

அனைவரையும் ஒன்றாகக் கருதி விருப்பு வெறுப்பு இன்றி சமமாக நீதி வழங்கும் அறநெறியைப் பின்பற்றுவதே ஆட்சியின் அடிப்படைக் கடமையாகும். அதிகாரச் செருக்கால், படைபலத்தால் மக்களை அடக்கி ஆள முடியாது. இவ்வுண்மையைப் புறநானூற்றுப் பாடல் உணர்த்துகின்றது. இதனை,

"கடுஞ் சினத்த கொல் களிறும்; கதழ் பரிய கலி மாவும்,

நெடுங் கொடிய நிமிர்தேரும், நெஞ்சு உடைய புகன்மறவரும், என

நான்குடன் மாண்டது ஆயினும், மாண்ட

அற நெறி முதற்றே, அரசின் கொற்றம்;" (Swaminatha Iyer, 1894)

என்கிறார் மருதன் இளநாகனார். அரசாட்சியின் வெற்றி படைபலத்திலே இல்லை. யானைப்படைகள் இருந்தால் என்ன? விரைந்து பாயக்கூடிய குதிரைப்படைகள் குவிந்திருந்தால் என்ன? நீண்ட கொடிகள் பறக்கின்ற உயர்ந்த தேர்ப்படைகள் திரண்டிருந்தால் தான் என்ன? கலங்காத நெஞ்சமே, புகழும் உடைய காலாட் படைகள் கணக்கின்றியிருந்தால்தான் என்ன? இப்படிப்பட்ட வலிமையான நான்கு படைகளைப் பெற்றிருந்தாலும் வெற்றியில்லை. அரசாட்சியின் வெற்றி அறநெறி வழியாக ஆட்சிபுரிவதால் மட்டுமே நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்க முடியும் என்று இப்பாடல் வழியாக விளக்கியுள்ளார். ஆகவே இப்பாடல் செவ்வியல் பண்புகளான பொதுமைப்பண்பும், உயரிய அறக்கருத்தும் தலைமைப்பண்பும் கொண்டதாக விளங்குகின்றது.

## பழிக்கு அஞ்சும் பண்பு

உயிரைவிட மேன்மையாகக் கருதப்படுவது ஒழுக்கம். ஒழுக்கத்தில் சிறந்ததாகக் கருதப்படுவது மானம் என்னும் தன்மான உணர்வு. புகழ் உண்டாகுமானால் தன் உயிரையும் கொடுப்பார்கள். பழி உண்டாகுமானால் உலகையே பரிசாகக் கொடுத்தாலும் தவிர்க்கும் பண்புகள் கொண்டவர்கள் சான்றோர்கள். இதனை,

பிறர் அஞ்சுவது அஞ்சி,

புகழ் எனின், உயிரும் கொடுக்குவர், பழிஎனின்,

உலகுடன் பெறினும், கொள்ளலர்" (Swaminatha Iyer, 1894)

என்கிறார் கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி. ஆகவே இப்பாடல் உலக பொதுமைப்பண்பு கொண்டு விளங்குகின்றது.

## மறப்போரில் மகளிர்

மகளிர் போர்களம் புகுந்து போரிடவில்லை எனினும் மறவுணர்வு மிக்கவர்களாக இருந்தனர். தங்கள் குடும்பத்திலுள்ள ஆடவர்களைப் போரிடத் தூண்டி நின்றமையைக் காணலாம்.

"ஒரு மகன் அல்லது இல்லோள்

செருமுகம் நோக்கிச் செல்க என விடுமே!" (Swaminatha Iyer, 1894)

என்னும் இப்பாடலில் தன் தந்தை, கணவன் என அடுத்தடுத்துப் போரில் இறந்தாலும் தனது ஒரே மகனைச் செருமுகம் நோக்கிச் செல்லத்தூண்டும் மகளிர் மற உணர்வு வெளிப்படுகிறது. மேலும்,

"சிதைந்து வேறு ஆகிய

படு மகன் கிடக்கை காணூஉ,

ஈன்ற ஞான்றினும் பெரிது உவந்தனளே!" (Swaminatha Iyer, 1894)

என்று கூறும் பாடல் அடிகளால் தன் மகன் போர்களத்தில் புறமுதுகு காட்டிருந்தால் அவனுக்குப் பாலூட்டி வளர்த்த மார்பை அறுத்து எறிவேன் என வஞ்சினம் கூறும் மகளிரின் மறப்பண்பையும் காண முடிகின்றது. இப்பாடல் பெண்களின் வீரம் கூறும் பாடலாகவும், மரபுப்பண்பைக் கொண்டதாகவும் விளங்குகின்றது.

## பிறர் நலம் பேணல்

தன்னலமின்றி பிறர் நலம் பேணி உழைக்கும் சான்றோர்களின் பண்புகளை எடுத்துக் கூறுமுகமாக உயர் யர்ந்த பண்புகளை அழுத்தம் பெறக்காட்டுகிறார் புலவர். இதனை,

"உண்டால் அம்ம, இவ்வுலகம் - இந்திரர்

அமிழ்தம் இயைவது ஆயினும் இனிது எனத்

தமியர் உண்டலும் இலரே; முனிவு இலர்;

துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது அஞ்சி,

புகழ் எனின், உயிரும் கொடுக்குவர், பழியெனின்,

உலகுடன் பெறினும், கொள்ளலர்; அயர்விலர்;

அன்ன மாட்சி அனையர் ஆகி,

தமக்கென முயா நோன் தாள்,

பிறர்க்கு என முயலுநர் உண்மையானே." (Swaminatha Iyer, 1894)

என்கிறார். அமிழ்தம் கிடைத்தாலும் தனியே உண்ணுதல் கூடாது, பிறரிடம் வெறுப்புக் கொள்ளுதல் கூடாது, பிறர் துன்பம் கண்டு இரங்குதல் வேண்டும். புகழை விரும்புதல் வேண்டும், பழியை ஏற்றுக் கொள்ளுதல் கூடாது, சோர்வு அடையாது, தன்னலம் கருதாது உழைத்தல் வேண்டும் என்பன போன்ற பண்புகளைச் சான்றோர்களுக்கு உரியனவாக இப்பாடல் கூறுகின்றது.

எப்பொழுதும் பிறர்பண்பு நன்மைக்காகவே கொள்கையிலே உழைக்கும் உறுதியுள்ளவர்களாகவும் உள்ளவர்களாகவும், தம் திகழ வேண்டும் என்ற மக்கள் பண்பையே இப்பாடல் சுட்டி நிற்கின்றது. இந்தபாடல் தமிழ்நாட்டினர்க்கு மட்டும் கூறியதன்று. தமிழர்க்கு மட்டும் சொல்லியதன்று. உலக மக்கள் அனைவருக்கும் எடுத்துரைப்பது போல் அமைந்துள்ளது. ஆகவே இப்பாடல் செவ்வியல் பண்புகளுள் ஒன்றான நிலைத்த உண்மைகளைக் கொண்டு விளங்குகின்றது.

## ஈகைப் பண்பு

தம்மிடம் இருக்கும் பொருளைப் பிறருக்குக் கொடுத்தலாகிய கொடை, வள்ளமை முதலியன மாந்தரிடம் இருக்க வேண்டிய ஒரு பண்பாகும். இப்பண்பை மறைமுகமாக வலியுறுத்தும் பொருட்டு,

"செல்வத்துப் பயனே ஈதல்;

துய்ப்பேம் எனினே, தப்புந பலவே." (Swaminatha Iyer, 1894)

என்கிறது புறநானூறு. மாந்தர்கள் தம்மிடமுள்ள செல்வத்தைப் பிறர்க்குக் கொடாது, தாமே துய்ப்போம் என்றால் அஃது அவர்களிடம் நில்லாது. அவர்களை விட்டுச் சென்று விடும். செல்வத்தின் பயனே ஈதலாகும். பிறர்க்குக் கொடுக்கும் பொழுது தான் செல்வம் வளரும் தன்மை உடையதாகிறது. ஆதலால் பிறர்க்குப் பொருளைக் கொடுக்கும் ஈகையாகிய பண்பை மேற்கொள்ள வேண்டும் என்று கூறுகின்றது இப்பாடல். மேலும்,

"நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தாரே" (Swaminatha Iyer, 1894)

என்ற பாடலின் மூலம் இவ்வுலகமானது நீரின்றமையாது; அதுபோல, உயிர்கள் உணவின்றி வாழ முடியாது. ஆதலால் பிறர்க்கு உணவு கொடுத்தல் அவர்களுக்கு உயிர்கொடுத்தல் போன்றதாகும் என்கிறது. இவ்வாறான நிலைத்த உண்மைகளைக் கூறுவதால் இவை மரபுடைமை பண்பைக் கொண்டு விளங்குவதை உணர முடிகின்றது.

## கல்வியின் மாண்பு

கல்விச் செல்வமனது அழியாச் செல்வம். இத்தகு கல்வியை,

"உற்றுழி உதவியும், உறு பொருள் கொடுத்தும்,

பிற்றை நிலை முனியாது, கற்றல் நன்றே" (Swaminatha Iyer, 1894)

என்கிறார் புலவர். இப்பாடல் கல்வி கற்கும் முறையை எடுத்து நவில்கின்றது. அத்துடன் என்றும் எந்நிலையிலும் பிள்ளைகளிடத்து இயல்பு மாறாத தாய்கூட, தனது பல பிள்ளைகளுள்ளும் கற்ற அறிவுடையவனையே விரும்புவாள். ஆதலால் அத்தகு கல்வியை வெறுக்காது கற்க வேண்டும். இவ்வாறு, கற்க கல்விச் சிறப்பினையும் கற்கும் முறையினையும் இப்பாடல் முறைப்படுத்திக் காட்டுகின்றது.

## விருந்தோம்பல் பண்பு

சங்க காலத்தில் பெரிதும் போற்றப்பட்ட பேரறம் விருந்தோம்பல். சங்க காலத்தில் அரசராலும், மக்களாலும் அறியாதவர்களாக இருந்தனர். இதனை, விருந்தோம்பப்பட்டவர்கள் முன்பின்

"ஒரு நாள் செல்லலம்; இரு நாள் செல்லலம்;

பலநாள் பயின்று, பலரொடு செல்லினும்,

தலை நாள் போன்ற விருப்பினன் மாதோ" (Swaminatha Iyer, 1894)

என்கிறார் புலவர். மன்னன் அதியமானிடம் ஒரு நாள் இல்லை. இரு நாள் இல்லை, பல நாள் பலரோடு சென்றாலும். முதல் நாள் போலவே இன்முகத்துடன் வரவேற்று அனைவரையும் உபசரிப்பான் என்று ஔவையார் கூறுகின்றார். இப்பாடல் எக்காலத்திற்கும் ஏற்ற வண்ணம் அமைந்துள்ளது.

## முடிவுரை

பொதுமைப்பண்பும், உயரிய சிந்தனையும் கொண்டு விளங்குகின்றது. இவ்வாறாக புறநானூற்றில் செவ்வியல் பண்புகள் காணப்பெறுகின்றன. எட்டுத்தொகை புறஇலக்கியங்களில் இடம்பெறும் செவ்வியல் பண்புகள் அனைத்தும் உடையவைகளாகத் திகழ்கின்றன. எக்காலத்துக்கும் நிலைத்து நிலைபேறு நிற்கும்.

## References

Sidhamparanaar, S. (1986) Ettu Thogaiyum Tamilar Panbaadum, Ilakkiya Nilayam, Chennai, India

Swaminatha Iyer, U.V. (1984) Purananooru Moolamum Uraiyum, Jubilee Press, Chennai, India

**Funding**
No funding was received for conducting this study.

**Conflict of interest**
The Authors has no conflict of interest to declare that they are relevant to the content of this article.

**About the License**
© The Author 2023. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

Y. Durgadevi, Analytical properties in Purananuru, Indian Journal of Multilingual Research and Development, Vol 4, Iss 1 (2023) 14-18. DOI: https://doi.org/10.54392/ijmrd2313